பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
26 01 2025 **SUNDAY** 6 30 **PM**

வணக்கம் - மாநிலச் செய்திகள்
தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் 76வது குடியரசு தினம் இன்று கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

2. டங்ஸ்டன் சுரங்க திட்டத்தை எதிர்த்து போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகளை தமிழக அரசு திரும்பப் பெற்றுள்ளது.

3. தமிழகத்தில் திமுக அரசு பதவியேற்ற பின்னர் பெறப்பட்ட முதலீடுகள் குறித்து வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என்று அஇஅதிமுக வலியுறுத்தியுள்ளது.

4. வடகிழக்கு பருவமழை அடுத்த இரு தினங்களில் தென்னிந்திய பகுதியிலிருந்து விலக வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5. 19 வயதுக்குட்பட்டோருக்கான உலக கோப்பை மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**>>>>>><<<<<<**

நாட்டின் 76-வது குடியரசு தினம் கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

குடியரசு தின அணிவகுப்பின் தொடக்கமாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி, புதுதில்லியில் உள்ள தேசிய போர் நினைவுச் சின்னத்தில் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

(சவுண்ட் பைட் (1) ட்ரம்பட் 35 செகண்ட்ஸ்)

இதனைத் தொடர்ந்து குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு மற்றும் சிறப்பு விருந்தினரான இந்தோனேஷிய அதிபர் திரு. **Prabowo Subianto,** அலங்கரிக்கப்பட்ட குதிரை ரத வாகனத்தில் அழைத்து வரப்பட்டனர்.

(சவுண்ட் பைட் (2) குதிரை - 42 செகண்ட்ஸ்)

இதன்பின்னர், தேசியக் கொடி பறக்கவிட்டபோது ஹெலிகாப்டர் மூலம் மலர்கள் தூவப்பட்டன.

இதனைத் தொடர்ந்து, நாட்டின் ராணுவ வலிமையையும், கலாச்சார பெருமையையும் பறைசாற்றும் வகையிலான அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு தொடங்கியது.

சிறப்பு விருந்தினராக இந்தோனேஷிய அதிபர் பங்கேற்றதை அடுத்து, அந்நாட்டின் 190 பேர் கொண்ட ராணுவ பேண்ட் அணிவகுப்பும் இதில் இடம்பெற்றது.

(சவுண்ட் பைட் (3) பேண்ட் 47 செகண்ட்ஸ்)

ஐயாயிரம் பேர் பங்கேற்ற நடன நிகழ்ச்சியும் இந்த அணிவகுப்பில் இடம்பெற்றது.

தமிழகத்தைச் சேர்ந்த நடனக் கலைஞர்களும் இதில் பங்கேற்றனர்.

(சவுண்ட் பைட் (4) தமிழ் பாடல் 31 செகண்ட்ஸ்)

மத்திய ரிசர்வ் காவல்படையின் அனைத்து மகளிர் பிரிவு சார்பில் 148 பேர் கொண்ட படையினர் மிடுக்குடன் இந்த அணிவகுப்பில் இடம்பெற்றனர்.

(சவுண்ட் பைட் (5) மகளிர் 30 செகண்ட்ஸ்)

இந்த அணிவகுப்பில் விமானப்படையின் சாகச நிகழ்ச்சி பார்வையாளர்களை மெய்சிலிர்க்க வைத்தது.

(சவுண்ட் பைட் (6) சாகசம் 30 செகண்ட்ஸ்)

நாடுமுழுவதிலுமிருந்து மத்திய அரசின் சிறப்பு அழைப்பாளர்களாக பத்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் இந்த அணிவகுப்பினை பார்வையிட்டனர்.

தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி, சென்னை, காமராஜர் சாலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தேசியக் கொடியை பறக்கவிட்டு, அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

மாவட்ட தலைநகரங்களில் ஆட்சியர்கள் தலைமையில் குடியரசு தின அணிவகுப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

குடியரசு தினத்தை முன்னிட்டு மாநிலம் முழுவதும் கிராமசபைக் கூட்டங்கள் இன்று நடைபெற்றன.

இந்நாளையொட்டி, தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி அளித்த தேநீர் விருந்தில், உயர்நீதிமன்ற நீதிபதிகள், முப்படைகளைச் சேர்ந்த அதிகாரிகள் மற்றும் துணைவேந்தர்கள் பங்கேற்றனர்.

பிஜேபி, அஇஅதிமுக, தேமுதிக, த.மா.கா, புதிய தமிழகம் உள்ளிட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் இதில் கலந்து கொண்டனர்.

பழங்குடியின பிரதிநிதிகள், பிரதமரின் மன்கிபாத் உரையில் இடம்பெற்றவர்கள் மற்றும் வழக்கறிஞர்களும் தேநீர் விருந்தில் பங்கேற்றனர்.

**>>>>>><<<<<<**

மதுரையில் டங்ஸ்டன் சுரங்க திட்டத்தை எதிர்த்து போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகளை தமிழக அரசு திரும்பப் பெற்றுள்ளது.

இதுதொடர்பாக மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், 11 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகள் திரும்பப் பெறப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையே, டங்ஸ்டன் சுரங்க ஏலத்தை மத்திய அரசு ரத்து செய்துள்ள நிலையில், அதற்கு தாங்கள் தான் காரணம் என்ற மாயத்தோற்றத்தை ஏற்படுத்த முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் முயற்சிப்பதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு. அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், தமிழகத்தில் கடந்த நான்காண்டுகளில், வேங்கைவயல், அண்ணா பல்கலைக் கழக மாணவி பாலியல் வன்கொடுமை

உள்ளிட்ட பொதுமக்கள் எதிர்கொண்ட பல்வேறு பிரச்சினைகளில் அங்கு சென்று ஆறுதல் கூறாத முதலமைச்சர், தற்போது அரிட்டாபட்டி செல்வதாக குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர், பெறப்பட்ட முதலீடுகள் குறித்து வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், டாவோஸில் நடைபெற்ற உலக பொருளாதார அமைப்பின் வருடந்திர கூட்டத்தில் பல்வேறு மாநிலங்கள் பெருமளவு முதலீட்டை ஈர்த்திருப்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழகத்தைச் சேர்ந்த தொழில்துறை அமைச்சர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட போதிலும், முதலீடுகள் பெறப்படாதது வருத்தமளிப்பதாக உள்ளது என்று திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

வடகிழக்கு பருவமழை அடுத்த இரு தினங்களில் தென்னிந்திய பகுதியிலிருந்து விலக வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரைக்கண்ணன் 36 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

மாவட்டச் செய்திகள்

விழுப்புரம் மாவட்டம், வி. சாலையில் நடைபெற்ற கிராமசபைக் கூட்டத்தில் மாநில அமைச்சர் திரு. பொன்முடி இன்று பங்கேற்றார்.

>>>>>><<<<<<

திருவள்ளூர் வைத்திய வீரராகவ சுவாமி கோவிலில் தை பிரமோற்சவ கருட சேவை கோபுர தரிசனம் இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

19 வயதுக்குட்பட்டோருக்கான உலக கோப்பை மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியின் சூப்பர்-6 சுற்றில், இந்தியா 8 விக்கெட் வித்தியாசத்தில் பங்களாதேஷை வென்று அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மலேசியாவில் நடைபெற்ற இப்போட்டியில் டாஸ் வென்ற இந்தியா முதலில் பந்துவீச தீர்மானித்தது. இதனையடுத்து பேட் செய்த பங்களாதேஷ் தொடக்க முதலே விக்கெட்டுகளை இழக்கத் தொடங்கி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 8 விக்கெட் இழப்பிற்கு 64 ரன் மட்டுமே எடுத்தது.

65 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பின்னர் பேட் செய்த இந்தியா 7 புள்ளி ஒரு ஓவரில் 2 விக்கெட் இழப்பிற்கு 66. ரன் எடுத்து வெற்றி பெற்றது.

>>>>>><<<<<<

ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட் போட்டியில், தமிழக அணி 209 ரன் வித்தியாசத்தில் சண்டிகர் அணியை வென்றது.

**>>>>>>end<<<<<<**